# பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்*

## பொதுவான போக்குகள்

மேம்பட்ட வியாபாரச் சூழ்நிலையைத் தொடர்ந்து வலுவுக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வி சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் நிறுவப்பட்ட இயலளவின் அதிகரிப்பு என்பன காரணமாக நீர் மின்வலு உருவாக்கம் உயர் வடைந்தமை என்பனவே 1990 இன் உள்நாட்டு வலுத்துறையில் காணப்பட்ட முக்கிய பண்புகளாக விளங்கின. 1990 ஓகத்தில் வளைகுடாப் பிரச்சினை உருவானதைத் தொடர்ந்து பன்னாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினது விலைகளின் வரம்பு கடந்த அதிகரிப்பானது 1990 இல் வலுத் துறையின் மீது பாதகமான சிக்கல்களை ஏற்படுத்தியது. இதேவேளை இலங்கைப் புகைவண்டிப் பகுதியும் தனியார் பேருந்துப் போக்குவரத்தினரும் மேம்பட்ட செயலாற்றத்தினைக் காட்டிய வேளையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் மோசமடைந்தன. அரசினால் வீடமைப்புத் துறைக்கு வழங்கப்பட்ட அதி உயர் முன்னுரிமையைப் பிரதிபலிக்கும் வகையில் 1990 இல் 15 இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடக்கி வைக்கப் பட்டது. எனினும் பொருட்களினதும் நிதியினதும் இடர்ப்பாடுகள் காரணமாக இந்தத் துறையின் நடவடிக்கைகள் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டன. இதேவேளை யில் நாட்டில் பாதுகாப்பு நிலைமைகள் முன்னேற்றமடைந்ததைத் தொடர்ந்து அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்புத் துறைகள் 1990 இல் முன்னேற்றத்தைக் காட்டின.

## வலு

1990 இல் நாட்டில் முன்னேற்றமடைந்த பாதுகாப்பு நிலைமைகளைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் காரண மாக மின் வலுவுக்கான கேள்வி அதிகரித்தது. ஆண்டின் பெரும்பாலான காலப் பகுதியில் நிலவிய சாதகமான வானிலைத் தன்மைகளுடன் நீர் மின்வலுவின் நிறுவப்பட்ட இயலளவு அதிகரித்தமை நீர் மின்வலு உருவாக்கத்தின் மட்டத்தில் அதிகரிப்பொன்றினை விளைவித்தது. இதன் விளைவாக நாட்டின் வலுவுக்கான கேள்வி முழுவதனையும் பெரும்பாலும் நீர் மின்வலுவின் மூலமாக வழங்கு வதற்கும் வெப்ப மின்வலு உருவாக்கத்தினை ஆகக் குறைந்த மட்டத்திற்குக் குறைப்பதற்கும் இலங்கை மின் சபைக்கு இயலுமாகக் காணப்பட்டது. எனினும் வளைகுடாப் பிரதேசத்தில் நிலவிய அமைதியின்மையின் காரணமாகப் பன்னாட் டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகூடிய அதிகரிப்பின் காரணமாகவும் இதன் விளைவாக உள்நாட்டுச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட விலை மீளாய்வுகள் காரணமாகவும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் வலுத்துறை சில பாதகமான அபிவிருத்திகளை எதிர்நோக்கவேண்டி யிருந்தது.

---

* திப்பிரிவின் பகுப்பாய்வுகள் சம்பந்தப்பட்ட முகவராண்மைகளினால் வழங்கப்பட்ட தரவுகளினது அடிப்படையிலானவையாகும்

## அட்டவணை 1.23

## வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1989—1990

| விடயம் | அலகு | 1989 | 1988க்கு மேலாக சதவீத மாற்றம் | 1990* | 1989க்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. பெற்றோலிய உற்பத்திகள் | | | | | |
| 1.1 ஏற்றுமதிகள் ... | ரூ. ப. இ. | 2,241.9 | — 1.0 | 3,973.9 | 77.3 |
| | சிஎஉ ப.இ. | 48.5 | — 8.3 | 73.0 | 50.5 |
| 1.2 இறக்குமதிகள் ... | ரூ. ப. இ. | 8,376,3 | 6.9 | 14,366.9 | 71.5 |
| | சிஎஉ ப.இ. | 181.3 | — 1.1 | 264.0 | 45.6 |
| 1.3 இறக்குமதி செய்யப்பட்ட தொகை | | | | | |
| 1.3.1 மசகெண்ணெய் ... | மெ. தொ. | 1,275,059 | — 32.7 | 1,778,866 | 39.5 |
| 1.3.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ... | ,, | 374,344 | 161.6 | 124,986 | — 66.6 |
| 1.3.3 எனைய உற்பத்திகள் ... | ,, | 21,320 | — 20.1 | 29,055 | 36.3 |
| 1.4 மசகெண்ணெயின் சராசரி விலை ... | ரூ./பீ. ஒ. | 628.31 | 29.7 | 942.51 | 50.0 |
| | ஐ.அ.டொ./ பீ. ஒ. | 17.43 | 6.0 | 23.53 | 35 0 |
| 1.5 உள்நாட்டு விற்பனைகள் | | | | | |
| 1.5.1 சிறப்புப் பெற்றோல் ... | மெ. தொ. | 172,864 | 9.2 | 178,948 | 3.5 |
| 1.5.2 தன்னியக்க டீசல் ... | ,, | 483,551 | — 3.3 | 512,670 | 6.0 |
| 1.5.3 பார டீசல் ... | ,, | 22,734 | — 54.1 | 20,079 | — 11.7 |
| 1.5.4 சிறப்பு டீசல் ... | ,, | 16,585 | — 14.1 | 16,681 | 0.6 |
| 1.5.5 மண்ணெண்ணெய் ... | ,, | 160,033 | — 4.7 | 167,196 | 4.5 |
| 1.5.6 உலையெண்ணெய் ... | ,, | 151,044 | — 7.7 | 160,459 | 6.2 |
| 1.6 உள்நாட்டு விலை | | | | | |
| 1.6.1 சிறப்புப் பெற்றோல் ... | ரூ./இலிற்றர் | 20.00 | 48.1 | 30.00 | 50.0 |
| 1.6.2 தன்னியக்க டீசல் ... | ,, | 9.60 | 18.1 | 11.00 | 14.6 |
| 1.6.3 பார டீசல் ... | ,, | 9.20 | 17.5 | 10.60 | 15.2 |
| 1.6.4 சிறப்பு டீசல் ... | ,, | 10.90 | 17.5 | 13.00 | 19.3 |
| 1.6.5 மண்ணெண்ணெய் ... | ,, | 6.58 | — | 8.80 | 33.7 |
| 1.6.6 உலை எண்ணெய் | | | | | |
| 500 செக்கண்ட் ... | ,, | 5.00 | 18.5 | 6.60 | 32.0 |
| 800 செக்கண்ட் ... | ,, | 4.70 | 21.4 | 6.30 | 34.0 |
| 1000 செக்கண்ட் ... | ,, | 4.55 | 22.3 | 6.00 | 31.9 |
| 1.6.7 நிலக்கீல் ... | ரூ./கி.கி. | 8.45 | 17.0 | 11.00 | 30.2 |
| 2. மின் வலு | | | | | |
| 2.1 நிறுவப்பட்ட இயலளவு ... | மெ. வா. | 1,240.65 | 2.7 | 1,289.65 | 3.9 |
| 2.1.1 நீர் மின் ... | ,, | 968.45 | 3.2 | 1,017.45 | 5·1 |
| 2.1.2 வெப்ப மின் ... | ,, | 272.20 | 0.8 | 272.20 | — |
| 2.2 உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | ப.இ.கி.வா.ம | 2,858.1 | 2.1 | 3,149.4 | 10.2 |
| 2.2.1 நீர் மின் | ,, | 2,801.5 | 7.8 | 3,144.6 | 12.2 |
| 2.2.2 வெப்ப மின் ... | ,, | 56.6 | — 72.0 | 4.8 | — 91.5 |
| 2.3 மொத்த விற்பனைகள் ... | ப.இ.கி.வா.ம | 2,346.8 | — 0.8 | 2,560.7 | 9.1 |
| 2.3.1 வீடு ... | ,, | 420.8 | 3.8 | 508.6 | 20.9 |
| 2.3.2 கைத்தொழில் ... | ,, | 844.3 | — 6.2 | 887.3 | 5.1 |
| 2.3.3 வர்த்தகம் ... | ,, | 440.8 | — 1.6 | 509.2 | 15.5 |
| 2.3.4 உள்ளூராட்சி மன்றங்கள் ... | ,, | 623.7 | 5.0 | 638.1 | 2.3 |
| 2.3.5 தெரு விளக்குகள் ... | ,, | 17.2 | 1.2 | 17.5 | 1.7 |

* தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மின்சபை

1990 இல் ஏனைய மரக்கூறுகளுடன் விறகு, வேளாண்மை எச்சங்கள் மற்றும் விலங்குக் கழிவுகள் போன்ற வர்த்தகமல்லா வலு மூலங்களே இலங்கையில் வலுவுக்கான மிகப் பெரிய மூலமாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. 1990 இல் இம் மூலங்கள் நாட்டின் மொத்த வலு வழங்கலில் 69 சதவீதத்திற்கு வகை கூறியதோடு 61 இலட்சம் தொன் எண்ணெய்க்குச் சமமான வலுவை

வழங்கியதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோலியம், மின்வலு, திரவப் பெற்றோலிய வாயு, சிறு அளவு நிலக்கரி என்பவற்றை உள்ளடக்கிய வர்த்தகவலு மிகுதிக்கு வகை கூறியது.

1990 மாச்சில் ரன்தம்பே நீர் மின்வலுப் பொறி தொழிற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஆண்டு இறுதியில் நீர் மின்வலுவின் நிறுவப்பட்ட இயலளவு 49 மெகாவாட்டுக்களினால் 1,017.45 மெகாவாட்டிற்கு அதிகரித்தது. 1990 இறுதியில் வெப்ப மின்வலுவின் நிறுவப்பட்ட இயலளவு 272.2 மெகாவாட்டுக்களில் மாற்றமின்றி இருந்தது. இதன்படி 1990 இறுதியில் மின் வலுவின் நிறுவப்பட்ட மொத்த இயலளவு 1,289.65 மெகாவாட்டுக்களாக விளங்கியது.

முன்னைய ஆண்டின் 2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல், இலங்கை மின் சபையினால் உருவாக்கப்பட்ட மொத்த வலு 31,490 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களாக விளங்கி 10 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. நீர்த்தேக்கங்களில் நீர் மட்டங்கள் முன்னேற்றமடைந்ததைத் தொடர்ந்து நீர் மின் பொறிகளும் முழு இயலளவில் தொழிற்பட இயலுமாக இருந்தன. இதன் காரணமாக 1990 இல் மொத்த நீர் மின்வலு உருவாக்கம் 31,450 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களாக 12 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக 1990 இல் மொத்த மின்வலு உருவாக்கமும் நீர் மின் மூலங்களுக்கே கட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் வர்த்தக வலுவில் அதனது பங்கினை 1989 இன் 26 சதவீதத்திலிருந்து 29 சதவீதத்திற்கு அதிகரிக்கச் செய்தது. இதற்கு நேரிணையாக 1990 இல் வெப்ப மின்வலு உருவாக்கம் 560 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களிலிருந்து 48.8 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கு கணிசமான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. மின்வலு உருவாக்கத்திற்காகப் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களில் தங்கியிருத்தலில் காணப்பட்ட கடுமையான வீழ்ச்சியானது மின்வலு உருவாக்கத்தின் அலகுச் செலவினைக் குறைத்தது மட்டுமன்றி சென்மதி நிலுவைக்கும் நிவாரணம் வழங்கியது. இதேவேளையில் உருவாக்கல் மற்றும் மாற்றலில் ஏற்பட்ட இழப்புக்கள் 1989 இன் 5,110 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்கள் அல்லது மொத்த உருவாக்கத்தின் 17.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் 5,890 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கு அல்லது மொத்த உருவாக்கத்தில் 18.7 சதவீதத்திற்கு அதிகரித்தன. இழப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் உள்நாட்டுக் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் மின்வலு விற்பனை குறைவாகப் பதியப்பட்டமையினால் ஏற்பட்டதாகும்.

1990 ஏப்பிறல் 1 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் இலங்கை மின்சபையினால் மின் தீர்வைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. வீட்டுத்துறை வகைக்கான மின் தீர்வைகள் 50 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட வேளையில் முதல் 50 அலகுகளின் நுகர்வு இவ்வதிகரிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது. கைத்தொழில் மற்றும் வர்த்தக வகைகளுக்குப் பொருந்தக்கூடிய தீர்வைகள் முறையே 34–43 சதவீதத்தினாலும் 55–64 சதவீதத்தினாலும் திருத்தப்பட்டன. இதேவேளை உணவகங்களுக்குப் பொருந்தக்கூடிய தீர்வைகள் 59––69 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. மேலும் சிறு அளவுக் கைத்தொழில்களுக்கு நாள் நேரத் தீர்வைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பழைய தீர்வைகளுடன் திருத்தப்பட்ட தீர்வைகள் அட்டவணை 1.24 இல் தரப்பட்டுள்ளன. மின் தீர்வைகளின் மீளாய்வானது சராசரி தேறிய நிலையான சொத்துக்களின் மீது 8 சதவீத வருவாயினைப் பெறுவதையும் 1.5 சதவீதத்திற்குக் குறையாத படுகடன் பணிக்

கொடுப்பனவு வீதத்தைப் பேணுவதையும் உள்ளகக் காசு உருவாக்கத்திலிருந்து மூலதன வேலைகளுக்குத் தேவையான நிதியங்களின் 30 சதவீதத்தினை வழங்கு வதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

மின் தீர்வைகளின் அதிகூடிய மேல்நோக்கிய சீராக்கங்களின் மத்தியிலும் 1990 இல் மின்வலுவின் மொத்த விற்பனைகள் 09 சதவீதத்தினால் 25,610 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்தன. வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் இல்லாதிருந்திருந்தால் அதிகரிப்பானது அதி உயர்ந்ததாகக் காணப்பட்டிருக்கும். உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக உள்நாட்டுக் கேள்வி பெருமளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த 1989 இன் 4 சத வீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் வீட்டுத்துறைக்கான மின்வலு விற்பனை அதியுயர்வான 21 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதேபோன்று கைத் தொழில் மற்றும் வர்த்தகத்துறைக்கான விற்பனவுகள் முறையே 5 சதவீதத் தினாலும் 16 சதவீதத்தினாலும் 8,870 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங் களுக்கும் 5,090 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கும் அதிகரிப்புக் களைப் பதிவு செய்து இத்துறைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் விரிவாக்கத்தையும் நாட்டின் பாதுகாப்பு நிலைமை முன்னேற்றமடைந்தமையை யும் பிரதிபலித்தன. இதேவேளையில் 1990 இல் உள்ளூராட்சி அதிகார சபை களுக்கான தொகை வடிவிலான விற்பனைகள் 2 சதவீதத்தினால் 6,380 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்தன.

பன்னாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களுக்கான விலை களின் கூடிய அதிகரிப்புடன் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதித் தொகையினது அதிகரிப்பும் இணைந்து 1990 இல் பெற்றோலிய இறக்குமதிகள் மீதான வெளிநாட்டுச் செலாவணிச் செலவில் கணிசமான அதிகரிப்பினை ஏற் படுத்தின. 1989 இல் மொத்த இறக்குமதிகளில் 10 சதவீதத்திற்கு வகைகூறிய பெற்றோலிய இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 1990 இல் 13 சத வீதத்திற்கு அதிகரித்தது. மசகெண்ணெயின் பீப்பாய் ஒன்றிற்கான சராசரி விலை 1989 இன் ஐக்கிய அமெரிக்க டொலர் 17.43 இலிருந்து (ரூ. 628) 1990 இல் ஐக்கிய அமெரிக்க டொலர் 23.53 இற்கு (ரூ. 943) 35 சதவீதத் தினால் அதிகரித்தது. மசகெண்ணெயின் இறக்குமதி அளவு 40 சதவீதத்தினால் 17,778,866 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. மாறாக தடங்கல்கள் எதுவுமின்றி பெற்றோலியத் தூய்மி சிறப்பாகச் செயற்பட்டமையினால் சுத்தி கரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதி 1989 இன் 374,344 மெற்றிக் தொன் களிலிருந்து 1990 இல் 124,986 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

பன்னாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களுக்கான விலை களின் மேல்நோக்கிய அசைவினைத் தொடர்ந்து ஆண்டின் பின்னரைப்பகுதியில் உள்நாட்டு விலைகள் இருமுறை மேல்நோக்கித் திருத்தப்பட்டன. முதலில் ஓகத்து 15 ஆம் நாளிலும் இரண்டாவதாக நவம்பர் 6 ஆம் நாளிலும் இவை நிகழ்ந்தன. 1989 உடன் ஒப்பிடுகையில் பெற்றோல் அதியுயர் அதிகரிப்பினைப் (75 சதவீதம்) பதிவு செய்த வேளையில் ஆகக் குறைந்த அதிகரிப்பு உலை எண்ணையில் (30–34 சதவீதத்திற்கிடையில்) காணப்பட்டது. 1983 இலிருந்து மீளாய்வு செய் யப்படாதிருந்த மண்ணெண்ணெயின் விலையும் 34 சதவீதத்தினால் அதிகரிக்கப் பட்டது. எனினும் பன்னாட்டுச் சந்தையில் விலைகள் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து திசெம்பர் 27 ஆம் நாளிலிருந்து விலைகள் கீழ்நோக்கித் திருத்தப் பட்டன. விலை மீளாய்வுகளின் விபரம் அட்டவணை 1.25 இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை 1.24

## திருத்தப்பட்ட மின் கட்டணங்கள்

| துறை | | | பழைய கட்டணம் ரூ. கி.வா.ம. | திருத்தப்பட்ட கட்டணம் ரூ. கி.வா.ம. | சதவீத அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|
| **வீட்டுப் பாவனை** | | | | | |
| அலகுகள் | 0—10 | ... | 0.55 | 0.55 | — |
| | 11—50 | ... | 1.05 | 1.05 | — |
| | 51—100 | ... | 1.05 | 2.00 | 90 |
| | 101—450 | ... | 2.00 | 3.00 | 50 |
| | >450 | ... | 2.45 | 4.00 | 62 |
| **மதவழிபாட்டுத்தலங்கள்** | | | | | |
| அலகுகள் | 0—150 | ... | 0.60 | 0.80 | 33 |
| | >150 | ... | 2.00 | 2.95 | 48 |
| **கைத்தொழில்** | | | | | |
| சிறிய | ... | ... | 1.75 | 2.35 | 34 |
| நடுத்தர | ... | ... | 1.60 | 2.20 | 38 |
| பாரிய | ... | ... | 1.50 | 2.15 | 43 |
| **பொது நோக்கங்கள்** | | | | | |
| சிறிய | ... | ... | 2.00 | 3.10 | 55 |
| நடுத்தர | ... | ... | 1.90 | 3.05 | 61 |
| பாரிய | ... | ... | 1.80 | 2.95 | 64 |
| **உணவகங்கள்** | | | | | |
| சிறிய | ... | ... | 1.95 | 3.10 | 59 |
| நடுத்தர | ... | ... | 1.85 | 3.05 | 65 |
| பாரிய | ... | ... | 1.75 | 2.95 | 69 |

மூலம்: இலங்கை மின் சபை.

குறிப்பு: சிறிய - 400/230 வாட்டுக்களிலான மின் வழங்கலும், 50 கி. வோ. அ. இற்குக்குறைவான வரையறுக்கப்பட்ட கேள்வியும்,

நடுத்தர – 400/230 வாட்டுக்களிலான மின் வழங்கலும் 50 கி. வோ. அ. இற்கு சமமான அல்லது மேலதிகமான,

பாரிய – 11 கி. வோ, 33 கி. வோ, 132 கி. வோ. களில் மின்வழங்கல்.

நாள் தீர்வை நேரம் கைத்தொழில் மற்றும் உணவக வகைகளுக்கு மட்டுமே பிரயோசிக்கப்படும். உச்ச வீதங்களும் பழைய உச்ச வீதங்களும் முறையே 102 – 116 சதவீதத்தினாலும், 35 – 45 சதவீதத்தினாலும் மேல் நோக்கித் திருத்தப்பட்டன.

## அட்டவணை 1.25

### பெற்றோலிய உற்பத்திகளின் திருத்தப்பட்ட விலைகள்

(இலீற்றர் ஒன்று ரூபாய்)

| உற்பத்திகள் | பழைய விலை | திருத்தப்பட்ட விலை | | |
|---|---|---|---|---|
| | | 15.08.90 | 06.11.90 | 27.12.90 |
| | (ரூ. ச.) | (ரூ. ச.) | (ரூ. ச.) | (ரூ. ச.) |
| பெற்றோல் ... ... | 20.00 | 25.00 | 35.00 | 30.00 |
| சிறப்பு பெற்றோல் ... ... | 22.00 | 27.00 | 38.00 | 32.50 |
| தன்னியக்க டீசல் ... ... | 9.60 | 11.00 | 13.00 | 11.00 |
| மண்ணெண்ணெய் ... ... | 6.58 | 8.00 | 8.80 | 8.80 |
| பார டீசல் ... ... | 9.20 | 10.60 | 12.50 | 10.60 |
| சிறப்பு டீசல் ... ... | 10.90 | 12.50 | 15.00 | 13.00 |
| உலை எண்ணெய் 200 ... | 5.79 | 6.65 | 7.50 | 7.50 |
| " 500 ... | 5.00 | 5.75 | 6.60 | 6.60 |
| " 800 ... | 4.70 | 5.40 | 6.30 | 6.30 |
| " 1000 ... | 4.55 | 5.25 | 6.00 | 6.00 |
| " 1500 ... | 4.29 | 4.90 | 5.60 | 5.60 |
| " 2000 ... | 4.15 | 4.75 | 5.40 | 5.40 |
| " 3500 ... | 3.83 | 4.40 | 5.00 | 5.00 |
| நிலக்கீல் கி. கி. ஒன்றுக்கு ... ... | 8.45 | 9.70 | 11.00 | 11.00 |
| திரவ பெற்றோலிய வாயு கி.கி. ஒன்றுக்கு ... | 8.86 | 10.20 | 11.20 | 11.20 |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு நுகர்வு 1989 இன் 1,071,350 மெற்றிக் தொன்களிலிருந்து 1990 இல் 1,136,111 மெற்றிக் தொன்களுக்கு 6 சதவீத மிதமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. எனினும் ஆண்டின் இறுதி 5 மாத காலப்பகுதியில் உள்நாட்டு விலைகளின் அதிகூடியளவிலான மேல்நோக்கிய சீராக்கங்களின் காரணமாக சில வகை பெற்றோலிய உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வியில் மந்த நிலைமை ஏற்பட்டது. முன்னைய ஆண்டின் 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் பெற்றோலுக்கான கேள்வி 4 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. 1990 இல் தன்னியக்க டீசல், மண்ணெண்ணெய் என்பனவற்றின் நுகர்வு முறையே 6 சதவீதத்தாலும், 5 சதவீதத்தாலும் அதிகரித்தது. உள்நாட்டு நிலைமைகள் முன்னேற்றமடைந்ததைத் தொடர்ந்து கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் வகையில் உலை எண்ணெயின் விற்பனவுகள் முன்னைய ஆண்டின் 7 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1990 இல் 6 சதவீதத்தினால் அதிகரித்தன. திரவப் பெற்றோலிய வாயுவின் விற்பனவுகளும் 23 சதவீதத்தினால் 18,718 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தன.

1990 இல் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி 29 சதவீதத்தினால் 620,610 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இதன்படி பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 1989 இன் ரூ. 22,420 இலட்சத்திலிருந்து (சிஎஉ 490 இலட்சம்) 1990 இல் ரூ. 39,740 இலட்சத்திற்கு (சிஎஉ 730 இலட்சம்) 77 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 51 சதவீதம்) அதிகரித்தன.

**போக்குவரத்து**

பலதரப்பட்ட போக்குவரத்துத் துறைகளின் வேறுபட்ட செயலாற்றத்துடன் 1990 இல் போக்குவரத்துத் துறையின் தொழிற்பாடுகள் கலப்பான பெறுபேறு களைக் காட்டின. கடந்த சில ஆண்டுகளாக ஊர்தித் தொகுதிக்கு ஏற்படுத்தப் பட்ட சேதங்கள் காரணமாகவும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் விரிவடைந்தமையின் காரணமாகவும் இலங்கை பிரதேச போக்கு வரத்துச் சபைகளின் நடவடிக்கைகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டன. ஆண்டின் இறுதிப் பாகத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் மீண்டும் தொடங்கப்பட்டதினால் தொழிற்பாடுகள் ஓரளவு குறை வடைந்தபோதிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான புகைவண்டிப் பணிகள் மீள் நிலைக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாண்டில் இலங்கை புகையிரதப் பகுதியினால் வழங்கப்பட்ட பணிகள் கணிசமாக முன்னேற்றமடைந் தன. மறுபுறத்தில் அரசினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் கிடைக்கத் தக்க தன்மை அதிகரிக்கப்பட்டமை, வரிச் சலுகைகள் வழங்கப்பட்டமை போன்ற பெருமளவு காரணங்களினால் தனியார்துறைக்குத் தனது தொழிற்பாடுகளை விரிவாக்க இயலுமாகக் காணப்பட்டது. இதேவேளையில் உள்நாட்டுச் சந்தையில் எரிபொருளுக்கான விலைகளின் அதிகூடிய மேல்நோக்கிய திருத்தங்களின் காரண மாகப் போக்குவரத்தின் அனைத்து முறைகளினதும் கட்டணங்கள் அதிகரித் திருந்தன.

1990 இல் இலங்கை பிரதேச போக்குவரத்துச் சபைகளின் தொழிற்பாட்டு அளவு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. 1990 இல் தொழிற்பட்ட கிலோ மீற்றர்களின் அளவு 2,450 இலட்சங்களுக்கு 6 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. தொழிற்பாட்டு அளவின் வீழ்ச்சிக்கு, குழப்பங்கள் நிலவிய சில ஆண்டுகளில் ஊர்தித் தொகுதிக்கு ஏற்படுத்தப்பட்ட சேதமும் 1990 நடுப்பகுதி யிலிருந்து வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் விரிவடைந் தமையினால் அட்டவணையிடப்பட்ட பணிகளில் ஏற்பட்ட தடங்கல்களும் பெரு மளவு காரணங்களாகின. ஏற்கெனவே உள்ள ஊர்தித் தொகுதிக்கு 66 புதிய பேருந்துகள் சேர்த்துக் கொள்ளப்பட்டபோதிலும் நாளொன்றுக்குத் தொழிற் படுத்தப்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை 1989 இன் 3,672 இலிருந்து 1990 இல் 3,300 இற்கு வீழ்ச்சியடைந்தது. மேலதிகமாக, ஊர்தித் தொகுதியின் பழுதடைந்த நிலையும் பொதுவான பேணல் நோக்கங்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களின் பற்றாக்குறையும் தொழிற்பாட்டின் வேகத்தில் குறைப்பினை விளைவித்தன. இதன் விளைவாக, இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகள் இவ்வாண்டில் அவற்றின் அட்டவணையிடப்பட்ட பணிகளில் அரைப்பங்கிற்கும் குறைவானவற்றையே தொழிற்படுத்தக்கூடியனவாக இருந்தன.

அட்டவணை 1.26

## போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள் 1989 – 1990

| விடயம் | அலகு | 1989* | 1988 இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1990* | 1989 இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் .. | எண்ணிக்கைகள் | | | | |
| 1.1 இ. . போ. சபையின் பேருந்துகள் .. | ,, | 260 | 6.1 | 78 | – 70.0 |
| 1.2 தனியார் சொகுசு வண்டிகள் .. | ,, | 444 | – 48.6 | 1159 | 161.0 |
| 1.3 தனியார் ஊர்திகள் .. | ,, | 11,921 | 8.0 | 15,061 | 26.3 |
| 1.4 உந்து கருருளிகள் ... | ,, | 66,696 | – 140.0 | 84,424 | 26.6 |
| 1.5 சரக்குகள் கொண்டு செல்வதற்கான ஊர்திகள் ... | ,, | 2,457 | – 1.9 | 2,813 | 14.5 |
| 1.6 நில ஊர்திகள் .. | ,, | 2,603 | 11.1 | 2,569 | – 1.3 |
| 1.7 ஏனையவைகள் .. | ,, | 14 | 1300 | 21 | 50 |
| 2. இலங்கை போக்குவரத்துச் சபை | | | | | |
| 2.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் .. | ப. இ. | 260.7 | 21.8 | 245.4 | – 5.9 |
| 2.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் .. | ,, | 12,980.0 | – 15.8 | 13,327.0 | 2.7 |
| 2.3 மொத்த வருவாய் .. | ரூ. ப. இ. | 2,242.4 | – 10.7 | 2,617.7 | 16.7 |
| 2.4 மொத்தச் செலவு .. | ,, | 2,755.2 | – 10.1 | வி.கி. | — |
| 2.5 மிகை/குறை (+/—) .. | ,, | — 512.8 | 0.5 | வி.கி. | — |
| 3. இலங்கை புகையிரதப் பகுதி | | | | | |
| 3.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் .. | ப. இ. | 5.7 | – 13.6 | 7.5 | 31.6 |
| 3.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் .. | ,, | 1,733.9 | – 6.7 | 2,484.7 | 43.3 |
| 3.3 சரக்கு தொன் கிலோ மீற்றர்கள் .. | ,, | 169.7 | – 14.1 | 167.3 | – 1.4 |
| 3.4 மொத்த வருவாய் .. | ரூ. ப. இ. | 457.7 | – 1.4 | 638.4 | 39.5 |
| 3.5 மொத்தச் செலவு .. | ,, | 883.1 | 2.3 | 1,056.7 | 19.7 |
| 3.6 மிகை/குறை (+/—) .. | ,, | — 425.3 | 6.5 | – 418.3 | – 1.6 |

* தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை,
இலங்கை புகையிரதப் பகுதி,
உந்து ஊர்திகள் திணைக்களம்.

தொழிற்பாட்டு அளவின் வீழ்ச்சியின் மத்தியிலும் 1990 இல் இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளின் பயணிகள் கிலோமீற்றர்களின் அளவு சிறிதளவான 3 சதவீதத்தினால் 133,270 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதே வேளையில் தன்னியக்க டீசலின் உள்நாட்டு விலை அதிகரிப்பினால் ஏற்பட்ட அதிகரித்த செலவை ஈடுசெய்யும்பொருட்டு 1983 இலிருந்து மாறாது காணப் பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பயணிகள் கட்டணங்கள் 1990 ஓகத்து 26 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் மேல்நோக்கித் திருத்தப் பட்டன. இதன்படி கிலோமீற்றர் ஒன்றிற்கான பயணக் கட்டணத்தை 17 சதத்தி லிருந்து 27 சதத்திற்கு அதிகரிக்கும் வகையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பயணிகள் கட்டணங்கள் 57 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. பயணிகள் கிலோமீற்றர் அளவினதும் அதிகரிக்கப்பட்ட பயணிகள் கட்டணங் களினதும் சிறிதளவான வளர்ச்சிக்கு இணங்க இலங்கை பிரதேச போக்குவரத்துச் சபைகளின் மொத்த வருவாய் 1989 இன் ரூ. 22,420 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 26,180 இலட்சத்திற்கு 17 சதவீதத்தினால் அதிகரித்தது.

கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட பாரிய இழப்புக்களின் நோக்கில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினைத் தொழிற்பாட்டுத் திறமையுடையதும் நிதி உறுதிப்பாட்டினைக் கொண்டதுமான தொழில் முயற்சியாக மாற்றும் பொருட்டு அதனை மக்கள் மயப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்தது. இது தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பொருளாதார மீள் நிறுவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான விரிவான தனியார் மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் விரிவாக்கமொன்றாகும். மக்கள் மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பேருந்துச் சாலைகளின் அடிப்படையில் உறுதியான அலகுகளாக 40 முதல் 50 சுதந்திர முயற்சிகளை நிறுவுவதற்குப் போக்குவரத்து அமைச்சு எதிர்பார்க்கின்றது. முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஊழியர்கள் செயல் திறத்துடன் பங்கேற்பதை ஊக்குவிக்கும் நோக்கில் சபைகளின் நிருவாகப் பொறுப்பு ஊழியர்களினால் தெரிவு செய்யப்பட்ட சபையொன்றிடம் ஒப்படைக்கப்படும். ஆரம்பக்கட்டத்தில் பங்குகளின் 50 சதவீதமானவை கட்டணங்கள் எதுவுமின்றி ஊழியர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற வேளையில் எஞ்சிய 50 சதவீதமான பங்குகள் நிதிநிறுவனங்களினால் பொறுப்பாண்மையாக வைத்திருக்கப்படும். 3 முதல் 5 ஆண்டுகள் கடந்த பின் பின்னைய பங்குகளும் ஊழியர்களுக்கே மாற்றப்பட்டு அவர்கள் இம் முயற்சிகளின் இறுதி உடைமையாளர்களாவதற்கு இடமளிக்கப்படும். மக்கள் மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் நடவடிக்கையாக இரத்மலானை, நீர்கொழும்பு, கண்டி தெற்கு ஆகிய மூன்று சபைகளும் 1990 திசெம்பர் 20 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட கூட்டு நிலையங்களாக மாற்றப்பட்டன. இதேவேளையில் செலவினை ஆகக் குறைந்த மட்டத்திற்குக் கொண்டுவரும் வழிமுறையொன்றாக 1990 ஏப்பிறலில் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னிச்சை இளைப்பாறற் திட்டத்தின்கீழ் 1989 உடன் ஒப்பிடுகையில் 1990 இறுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை 26 சதவீதத்தினால் 37,577 இற்குக் குறைக்கப்பட்டது.

இலங்கைப் பிரதேசப் போக்குவரத்துச் சபைகளின் தொழிற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய ஆண்டில் இலங்கைப் புகையிரதப் பகுதி சிறப்பாகச் செயலாற்றியுள்ளது. ஆண்டின் முதலரைப் பகுதியில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தலைமன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைப் பாதைகளில் தனது பணிகளை மீள்நிலைக்குக் கொண்டுவர இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு இயலுமாகக் காணப்பட்டது. இதேவேளையில் இரவு அஞ்சல் வண்டிகளும் பண்டிகை மற்றும் புனித யாத்திரைக் கால சிறப்பு வண்டிகளும் ஆண்டின் முதலரைப்பகுதியில் தொழிற்படுத்தப்பட்டன. எனினும் 1990 இன் நடுப்பகுதியிலிருந்து வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் விரிவடைந்ததைத் தொடர்ந்து இப்பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட பணிகளை மட்டுமே இலங்கைப் புகையிரதப் பகுதியினால் தொழிற்படுத்த இயலுமாக இருந்தது. இதன் விளைவாக இலங்கைப் புகையிரதப் பகுதியின் தொழிற்பட்ட கிலோ மீற்றர்களின் அளவு 1989 இன் 57 இலட்சத்திலிருந்து 1990 இல் 32 சதவீதத்தினால் 75 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதேபோன்று பயணத்தின் அதிகரித்த அளவைக் காட்டும் வகையில் பயணிகள் கிலோமீற்றர்களின் அளவும் 1989 இன் 17,340 இலட்சத்திலிருந்து 1990 இல் கணிசமாக 43 சதவீதத்தினால் 24,850 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதேவேளையில் சரக்குத் தொன் கிலோமீற்றர்களின் அளவு 1989 இன் 1,700 இலட்சத்திலிருந்து 1990 இல் 1 சதவீதத்தினால் 1,670 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

உள்நாட்டுச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக 1990 ஓகத்து 26 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் இலங்கைப் புகை வண்டிப் பகுதி பயணிகள் கட்டணங்களை மீளாய்வு செய்தது. இதன்படி மூன் றாம் வகுப்புக் கட்டணங்கள் கிலோமீற்றர் ஒன்றிற்கு 30 சதவீதத்தினால் 17 சதத்திற்கு அதிகரிக்கப்பட்டவேளையில் புறநகர்ப்பகுதிக்கானவை கிலோ மீற்றர் ஒன்றிற்கு 50 சதவீதத்தினால் 21 சதத்திற்கு அதிகரிக்கப்பட்டன. முதலாம் வகுப்பு, இரண்டாம் வகுப்புக் கட்டணங்கள் முறையே 26 சதவீதத் தினாலும் 27 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டன. சரக்குக் கட்டணங்களும் 1990 யூன் 11 ஆம் நாளிலும், யூன் 26 ஆம் நாளிலும் இருமுறை திருத்தப் பட்டன. அதிகரிக்கப்பட்ட பயணிகள் கட்டணத்துடன் பயணிகள் கிலோமீற்றர் கள் அளவின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது 1990 இல் இலங்கைப் புகைவண் டிப் பகுதியின் வருவாயினை 40 சதவீதத்தினால் ரூ. 6,380 இலட்சத்திற்கு அதிகரிக்கச் செய்தது. இதேபோன்று மொத்தச் செலவும் 20 சதவீதத்தினால் ரூ. 10,570 இலட்சத்திற்கு அதிகரித்து இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்பினை 1989 இன் ரூ. 4,250 இலட்சத்திலிருந்து ரூ. 4,180 இலட்சத்திற்குக் குறைவடையச் செய்தது.

1989 உடன் ஒப்பிடுகையில் 1990 இல் தனியார் துறையினால் வழங்கப் பட்ட பயணிகள் பணிகள் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தன. உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின்படி 1990 இல் தனியார் பேருந்து களின் புதிய பதிவுகள் 1989 இன் 388 இலிருந்து 1,071 இற்குக் கிட்டத்தட்ட மும்மடங்காக அதிகரித்தன. தனியார் பேருந்துப் போக்குவரத்துத் தொடர்பான நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்குத் தேசிய அபிவிருத்தி வங்கியின் சிறிய நடுத்தரக் கைத்தொழில் கடன் திட்டத்தினூடாக பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்குச் சலுகை வட்டி வீதங்களில் கொடுகடன் வசதிகளின் அதிகரித்த கிடைக்கத்தக்க தன்மை, 30 இற்கு மேற்பட்ட ஆசன இயலளவைக் கொண்ட பேருந்துகளின் இறக்குமதிகளுக்கு மொத்த விற்பனை வரி, இறக்குமதித் தீர்வைகள் என்பனவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டமையின் காரணமாக ஊர்திகளுக்கான செலவு குறைக்கப்பட்டமை என்பன பெருமளவு காரணங்களாகின.

**வீடமைப்பு**

1989 இல் பத்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டம் முற்றுப் பெற்றதுடன் 1990 இல் வீடமைப்பு அபிவிருத்தியின் பாரிய கவனம் பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் மீதானதாக இருந்தது. 1984–89 காலப் பகுதியில் பத்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தினதும் 1979–83 காலப் பகுதியில் ஒரு இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தினதும் அனுபவங்களின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டது. புதிய வீடுகளின் கட்டுமானம், ஏற்கெனவேயுள்ள வீடுகளைத் தரமுயர்த்தல், வறிய மக்களின் புகலிட நிலைமைகளை மேம்படுத்துதல் போன்றவற்றிற்காகக் கடன்களையும் கொடைகளையும் வழங்குவதன்மூலம் பதினைந்து இலட்சம் குடும்பங்களுக்கு உதவுவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளாகும். 1990 இலிருந்து ஆறு வருட காலப்பகுதிக்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் விரிவடைந்து செல்கின்றது.

பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டமானது கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், இடர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், மாகாண சபை வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், மகாவலி வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், பெருந்தோட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், அரசல்லா—வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், ஊழியர்கள் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், தனிப்பட்ட குடும்பங்கள் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், தனிப்பட்ட அபிவிருத்தியாளர்கள் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், கட்டட மூலவளங்கள் அபிவிருத்தித் துணை நிகழ்ச்சித் திட்டம் போன்ற 11 துணை நிகழ்ச்சித் திட்டங்களால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுடனான தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டமாகும். பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான 11 துணை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களில், கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் கீழ் கிராமிய மற்றும் நகர்ப்புற குறை வருவாய்க் குடும்பங்களின் வீடமைப்புத் தேவைகளைக் கவனிக்கும் நேரடிப் பொறுப்பு வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச்சபைக்குச் சாட்டப்பட்டுள்ளது. இவ்விரு நிகழ்ச்சித் திட்டங்களும் 1995 இறுதியில் முறையே 450,000 குடும்பங்களுக்கும் 150,000 குடும்பங்களுக்கும் வீடமைப்பு வசதிகளை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளன. மேலும் இடர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழும் ஊழியர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும், இயற்கை இடர்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட இடர்கள் என்பனவற்றினால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணியும் தேசிய வீடமைப்பு மேலாண்மைச் சபையிடம் சுமத்தப்பட்டுள்ளது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபைக்கு மேலதிகமாக, புத்தாக்கம் புனர் நிருமாணம் சமூக நலன்புரி, பெருந்தோட்டக் கைத்தொழில், மகாவலி, தொழில் ஆகிய அமைச்சுக்களும், மாகாண சபைகள், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், கூட்டுறவுகள், வங்கிகள் தனிப்பட்ட அபிவிருத்தியாளர்கள், அரசல்லா அமைப்புக்கள் என்பனவும் பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பங்காளர்களாக இனங் காணப்பட்டுள்ளன.

1990 இல் பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வீடமைப்பு நிதி நிறுவனங்களின் நிதிக் கட்டுப்பாடுகள், ஆண்டின் பின்னரைப் பகுதியில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகரித்தமை, கட்டடப் பொருட்களின் பற்றாக்குறை, ஆகிய பல காரணிகளின் தாக்கத்துக்குள்ளாகின. எனினும் 1990 இல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு உதவுவதற்காகப் பல வழிமுறைகளை மேற்கொண்டது. மாகாண சபைகளின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றிலிருந்து நிதியங்களைத் திரட்டுவதற்காக வீடமைப்பு அபிவிருத்தி நிதி உதவுதொகைச் செயற்றிட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டன. மொத்த ஒதுக்குத் தொகை ரூ. 680 இலட்சமாகக் காணப்பட்டதோடு இதில் ரூ. 490 இலட்சம் 1990 இல் பெறப்பட்டது. இதேவேளையில் சமூக மட்டத்தில் பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாட்டினை எளிதாக்கும் பொருட்டு வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் நிறுவப்பட்டன. வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை ஒவ்வொரு பிரதேச

சபைப் பிரிவிலும் நிறுவுவதன் மூலம் அவற்றின் வலையமைப்பை சமூகம் முழுவதிலும் விரிவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் செலவு குறைந்த கட்டடப் பொருட்களின் உற்பத்தி, உள்ளூர் மூலப் பொருட்களின் அதி உயர் பயன்பாட்டின் மூலம் வருவாய் உருவாக்கத்துக்கான சந்தர்ப்பங்களை வழங்கல் ஆகிய இரட்டைக் குறிக்கோள்களுடன் மூலவளங்களின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. மேலதிகமாக காவல் நிலையம், கோவில்கள், பள்ளிக்கூடங்கள், சேவா வனிதா இயக்கம், அரசல்லா அமைப்புக்கள் போன்ற பலதரப்பட்ட அமைப்புக்களின் ஆதரவின்கீழ் பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான அதிகளவு உதவுதொகைகளைத் திரட்டுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், இடர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், மகாவலி வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், மாகாண சபைகள் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், பெருந்தோட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் போன்ற துணை நிகழ்ச்சித் திட்டங்கள் அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மிகப் பெரிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டமாகிய கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு பெறுநருக்கு ஆகக் கூடியது ரூ. 12,500 வீதத்தில் 28,708 குடும்பங்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டன. 1990 இறுதியில் மொத்தம் 15,787 அலகுகள் முற்றுப்பெற்றிருந்ததோடு இந்தத் திட்டத்தின் கீழான மொத்தச் செலவு ரூ. 2,070 இலட்சமாகவும் காணப்பட்டது. நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு பெறுநருக்கு ஆகக் கூடியது ரூ. 20,000 என்ற வீதத்தில் நகர்ப்புற குறைந்த வருவாயினைக் கொண்ட 3,983 குடும்பங்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் 1,493 அலகுகளின் கட்டுமான வேலைகள் முற்றுப்பெற்றிருந்ததோடு மொத்தக் கடன் பகிர்ந்தளிப்புக்கள் ரூ. 330 இலட்ச அளவில் காணப்பட்டன. இடர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் 2,179 ஆகக் காணப்பட்டவேளையில் முற்றுப்பெற்ற அலகுகளின் எண்ணிக்கை 145 ஆகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செலவு ரூ. 240 இலட்சமாகும். இதேவேளையில் மாகாண சபைகள் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1,070 குடும்பங்களுக்கு ரூ. 40 இலட்சம் கொண்ட தொகையொன்று வீடமைப்புக் கடன்களாக வழங்கப்பட்டது. மேலும் இவ்வாண்டில் நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் தனிப்பட்ட குடும்ப வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் கீழ் தேசிய வீடமைப்பு மேலாண்மைச் சபையினால் உரித்து வழங்கப்பட்ட 3,513 வீடமைப்புக் காணிகளின் பெறுமதி ரூ. 370 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 1.27

## பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றம்—1990

ரூபா பத்து இலட்சம்

| துணை நிகழ்ச்சித் திட்டம் | அடையப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | முற்றுப்பெற்ற அலகுகளின் எண்ணிக்கை | பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி |
|---|---|---|---|
| கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் | 28,708 | 15,787 | 207.3 |
| நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் | 3,983 | 1,493 | 32.6 |
| மாகாண சபை வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் | 1,070 | 127 | 3.9 |
| இடர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் | 2,179 | 145 | 24.3 |
| பெருந்தோட்டவீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம்* | 300 | இல்லை | 0.9 |
| மகாவலி வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் | 3,618 | 4,510** | 15.4*** |
| ஊழியர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் | 1,010 | 130 | 34.7 |
| மொத்தம் | 40,367 | 22,192 | 319.1 |

மூலம் : தேசிய வீடமைப்பு மேலாண்மைச் சபை
மகாவலி பொருளாதார முகவராண்மை.

* மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பன தவிர்த்து.

** மகாவலி பொருளாதார முகவராண்மை, ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம், தேசிய வீடமைப்பு மேலாண்மைச் சபை மற்றும் துணைக் குடும்பங்களால் பொறுப்பேற்கப்பட்ட கட்டுமானம் என்பன வற்றின் கீழ் முற்றுப்பெற்ற அலகுகள்

*** மகாவலி பொருளாதார முகவராண்மையினால் புதிய குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள்,

இதேவேளையில் 1990 இல் ஊழியர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல சிறப்பு வீடமைப்புச் செயற்றிட்டங்களைத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை மேற்கொண்டுள்ளது. கொழும்பு நகர எல்லைக்குள் குறை வருவாய்க் குடும்பங்களின் நன்மையின் பொருட்டு மதிப்பிடப்பட்ட ரூ. 15,000 இலட்சம் செலவில் 5,000 வீடுகள் நிகழ்ச்சித் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1990 இல் 5 செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட ரூ. 840 இலட்சம் செலவில் 407 வீடமைப்பு அலகுகளை முற்றுப்பெறச் செய்யவும் இலக்கிடப்பட்டது. இதேவேளை, நேரிணையான இதே காலப்பகுதியில் அரச ஊழியர்களுக்கு வழங்கும் பொருட்டு மதிப்பிடப்பட்ட ரூ. 2,710 இலட்சம் செலவில் 400 வீடுகளைக் கட்டி முடிப்பதற்காக நாரகேன்பிட்டி என்ற இடத்தில் மெனிங் நகர வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி, ஒல்லாந்து மற்றும் நோர்வேஜிய அரசுகள் ஆகியவற்றினால் நிதியிடப்பட்ட நடுத்தரகால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் சமூக நலன்புரிச் செயற்றிட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட பெருந்தோட்ட வீட மைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் 1990 இல் மேலும் நீடிக்கப்பட்டது. பெருந்தோட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டுமான வேலை களை நடத்திச் செல்வதற்குப் பொறுப்பான இரு அரச நிறுவனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனமும் 1990 இல் வீடமைப்புக் கட்டுமான வேலைகளின் மெதுவான முன்னேற்றத்தையே காட்டின. பெருந்தோட்டத் துறையின் நிருவாக முறையில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் கட்டுமான நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்திச் செல்வதில் ஏற்பட்ட தாமதமே இதற்கான காரணமாக அமைந்தது. தற்காலிகத் தரவுகளின்படி 1990 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் 96 புதிய வீடுகளைக் கட்டி முடிக்கவும் 180 வீடுகளைத் தரமுயர்த்தவும் மட்டுமே இயலுமாக இருந்தவேளையில் 66 புதிய வீடுகளும், 204 தரமுயர்த்தல்களும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இதேபோன்று 1990 இல் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் 4 புதிய வீடுகளையும் 3 தர முயர்த்தல்களையும் மட்டுமே பூர்த்தி செய்த வேளையில் 36 புதிய வீடுகளினதும் 22 தரமுயர்த்தல்களினதும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதே காலப்பகுதியில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் மேலும் 2,438 வீடுகளுக்கும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மேலும் 5,835 வீடுகளுக்கும் கழிவறை வசதிகள் வழங்கப்பட்டன. மேலதிகமாக, இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1990இல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை 300 குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்களை வழங்கியது.

1990 இல் மகாவலி வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மகாவலி பொருளாதார முகவராண்மையினால் முறைகள் எச், பீ, சீ, ஜீ மற்றும் எல் என்பவற்றில் உள்ள 3,618 குடும்பங்களுக்கு ரூ. 150 இலட்சம் வரையிலான நிதி உதவிகள் வழங்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் மகாவலி பொருளாதார முகவராண்மையிலிருந்தான வீடமைப்பு உதவியாக ரூ. 4,250 இனைப் பெற்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேலதிக மாக ஐரோப்பிய பொருளாதார சமூகம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை என்பனவற்றின் கீழ் மகாவலி குடியேற்ற வாசிகளுக்கு வீடமைப்புக் கடன் வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட் டுள்ளன. இதன்படி 1990 இல் ஐரோப்பிய பொருளாதார சமூகம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை என்பனவற்றின் கீழ் முறையே 226 வீடுகளும் 72 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டன. இவ்வாண்டில் மரம், சீமெந்து போன்ற கட்டடப் பொருட்களின் பற்றாக்குறையின் காரணமாக மகாவலி வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டுமான வேலைகள் ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டன.

1990 இல் தனியார் துறை வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி வசதிகளை வழங்கிய முதன்மை அரச நிறுவனங்களாக அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன விளங்கின. எனினும், 1990 இல் தனியார்துறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டமானது நிதியங்களின் உயர்ந்த செலவு, கட்டடப் பொருட்களின் விலை அதிகரிப்பு, கட்டடப் பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்ற காரணிகளால் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக தனியார் துறைக்கு அதிகளவு சலுகை நியதிகளில் கடன் வசதிகளை வழங்கும் பொருட்டு சில நிதி நிறுவனங்கள் தமது வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தினை மீளமைப்புச் செய்தன.

1990 இல் அரச ஈட்டு முதலீட்டு வங்கியானது தனியார்களுக்கும் உண்மைச் சொத்து அபிவிருத்தியாளர்களுக்கும் வீடமைப்பு நிதியத்தினை வழங்கும் கடன் வழங்கும் நிறுவனம் என்ற வகையிலான தனது பணியினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. தற்காலிகத் தரவுகளின்படி 1990 இல் ரூ. 2,700 இலட்சம் கொண்ட 2,643 வீடமைப்புக் கடன்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. எனினும், அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழான கடன்களின் எண்ணிக்கையும் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையும் முன்னைய ஆண்டைவிட முறையே 9 சதவீதத்தாலும், 19 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. இவ் வீழ்ச்சிக்கு 1990 இல் வட்டி வீதங்கள் மேல்நோக்கித் திருத்தப்பட்டமை, கட்டடப் பொருட்களின் அதிகூடிய செலவு என்பன பெருமளவு காரணங்களாகின. மாறாக, 1990 இல் வீடமைப்புக் கடன் மீட்புக்களின் மொத்தத் தொகை 17 சதவீதத்தினால் (நிலுவையில் இருந்தவை உட்பட) ரூ. 5,430 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதேவேளையில் 1990 இல் தனியார் துறையிடமிருந்து வீடமைப்புக் கடன்களின் கேள்வியை அதிகரிக்கும் வகையில் புதிய வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன்படி, வதிவு இல்லங்களின் திருத்தம் மற்றும் மேம்படுத்தல், பயன்படுத்தப்பட்ட வதிவு இல்லங்களின் கொள்வனவு என்பன தொடர்பாக 1989 இல் இடைநிறுத்தப்பட்ட வீடமைப்புக் கடன்கள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் தொழில் தருநரினால் வழங்கப்பட்ட நிதியங்களின் மீதான சலுகை வட்டி வீதங்களில் கடன் வழங்கும் அரச, மற்றும் அரசுசார் ஊழியர்களுக்கான சிறப்புக் குழு வீடமைப்புக் கடன் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. இதேவேளையில் ஊழியர் சேமநிதிய நிலுவைகளைப் பிணையாக வைத்து தொழில் அமைச்சினால் தொடக்கி வைக்கப்பட்ட ஊழியர் சேமநிதிய வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் அரச ஈட்டு முதலீட்டு வங்கி தொடர்ந்தும் வீடமைப்புக் கடன்களை வழங்கியது.

1990 இல் இரு அரச வங்கிகளான இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான தமது கடன் திட்டங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. 1990 இல் இலங்கை வங்கி 1,327 கடன் பெறுநர்களுக்கு ரூ. 5,870 இலட்சம் கொண்ட தொகையினை வீடமைப்புக் கடன்களாக வழங்கியது. வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் கடன் பகிர்ந்தளிப்புக்களின் பெறுமதியும் முன்னைய ஆண்டைவிட முறையே 50 சதவீத 58 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

1990 இல் வீடமைப்புக் கடன்களை வழங்குவதன் மூலம் தேசிய சேமிப்பு வங்கியும் வீடமைப்புத்துறைக்கு உதவியது. 1989 இல் 457 தனி ஆட்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 560 இலட்சத்திற்கு எதிராக 591 ஆட்களுக்கு ரூ. 700 இலட்சம் கொண்ட வீடமைப்புக் கடன்களை வங்கி வழங்கியது. 1990 இல் புதிய வீடுகளைக் கட்டுவதற்காக வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் 20 சத வீதத்தினால் ரூ. 350 இலட்சத்திற்கு அதிகரித்தன. கடனின் தொகைக்கும் நோக்கத்திற்குமேற்ப வீடமைப்புக் கடன்களுக்கான வட்டி வீதங்கள் 18 சத வீதத்திலிருந்து 22 சதவீதம் வரை வேறுபட்டன.

வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் வீடமைப்பு நோக்கங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கடன்களை வழங்கியது. 1989 இன் ரூ. 110 இலட்சத்திற்கெதிராக 1990 இல் வீடமைப்பு நோக்கங்களுக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் ரூ. 120 இலட்சமாக விளங்கின. பகிர்ந்தளிப்புக்காக நிதியங்கள் குறைவாகக் காணப்பட்டமையே மெது வான முன்னேற்றத்துக்கான பெருமளவு காரணமாக அமைந்தது. இவ்வாண்டில் கொழும்புக்கு வெளியே வசதிகளை விரிவுபடுத்தும் நோக்கில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் மாவட்டப் பிரிவுகளை நிறுவுவதற்காக ஏழு மாவட்டங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. கண்டி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இரண்டு பிரிவுகள் நிறுவப்பட்டன. 1990 இல் கடன்கள் மீதான சராசரி வட்டி 19 சதவீதமாக இருந்தது.

இதேவேளையில் முன்னைய நிகழ்ச்சித் திட்டமான பத்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டமும் 1990 இல் அதனது நடவடிக்கைகளை மேற்கொண்டது. பத்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1990 இல் ரூ. 370 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டதோடு கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், புத்தாக்கச் செயற்றிட்டங்கள் என்பனவற்றின்கீழ் 13,732 அலகுகள் முற்றுப்பெற்றன. மேலும் கிராமப்புறங் களிலும் நகர்ப்புறங்களிலும் உதவி தேவைப்படும் வறிய குடும்பங்களுக்குச் செவன வீடமைப்புக் கொடை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 5,176 அலகுகளை முற்றுப் பெறச் செய்வதற்கான கொடையாக ரூ. 80 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலதிகமாக 1990 இல் ரூ. 39 இலட்சம் பெறுமதி வாய்ந்த 197 கிராமிய வீடுகளின் உடைமை தனிப்பட்டவர்களுக்கு மாற்றப்பட்டது.

### நகர அபிவிருத்தி

1990 இல் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் மேற்கொள்ளப் பட்ட நகர அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள் அதிகரித்தன. சமூக கலாச்சார செயற்றிட்டங்களிலேயே இவை பெரும்பாலும் செறிவாகக் காணப் பட்டன. இவ்வாண்டில் சுகததாச உள்ளக விளையாட்டரங்கின் கட்டுமான வேலைகளுக்காகக் கிட்டத்தட்ட ரூ. 1,350 இலட்சம் கொண்ட தொகை யொன்று செலவிடப்பட்டது. இதற்கு மேலதிகமாகக் கெத்தாராமை விளை யாட்டரங்கினை மேம்படுத்துவதற்கான வேலைகள் தொடர்பாக ரூ. 500 இலட்சம் செலவிடப்பட்டது. இதேவேளையில் கோமாகம கைத்தொழில் அபி விருத்திச் செயற்றிட்டத்தின் உள்ளமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர் பாக ரூ. 250 இலட்சம் கொண்ட மேலதிக தொகையொன்று செலவிடப் பட்டது. 1990 இறுதியில் பேலியகொடை ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கட்டம் I இன் கீழ் விற்பனை செய்யப்படக்கூடிய காணியின்

90 சதவீதமானவை குத்தகைக்கு விடப்பட்டிருந்ததோடு குடும்பங்களை மீள மர்த்துவதற்காக 136 வீடமைப்பு அலகுகளைக் கட்டி முடிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

1989 இன் ரூ. 1,540 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான மொத்த முதலீடு ரூ. 3,150 இலட்சமாக விளங்கியது. மொத்தச் செலவில் ரூ. 1,350 இலட்சம் சமூக கலாச்சாரச் செயற்றிட்டங்கள் மீதானதாகக் காணப்பட்ட வேளையில் ரூ. 750 இலட்சம் வாடிக்கையாளர்களின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் மீதான வையாகும். இதேவேளையில் குறைவிருத்தியைக் கொண்ட அல்லது பயன்படுத்தப் படாத காணிகளைக் கொள்வனவு செய்வதற்காக காணி வங்கியினால் ரூ. 510 இலட்சம் கொண்ட தொகையொன்று செலவிடப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் மீது ரூ. 440 இலட்சம் கொண்ட மேலதிக தொகையொன்று செலவிடப்பட்டது. மொத்த முதலீடுகளில் 76 சதவீதமானவை முறிகளின் வழங்கல்களினூடாகவும் உள்ளக நிதிய உரு வாக்கத்தின் மூலமாகவும் நிதியிடப்பட்ட வேளையில் எஞ்சியது வாடிக்கையாளர் களால் வழங்கப்பட்டது.

**வீதிகளும் புகைவண்டிப் பாதைகளும்**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் வீதி அபிவிருத்தி மேலாண் மைச் சபையின் நடவடிக்கைகள் அதிகரித்தன. வெடி மருந்து வகைகள் கிடைக்கப் பெறாமை, வேலைகளின் நிறைவேற்றலுக்கான ஒப்பந்தகாரர்கள் இன்மை, வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் உள்நாட்டுக் குழப்பங்கள் போன்ற காரணங் களினால் நடவடிக்கைகள் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டபோதிலும் ஆய்வுக்குரிய ஆண்டில் பாதை வலையமைப்புப் புத்தாக்கம் தொடர்பான வேலைகள் முன் னேறிக் கொண்டிருந்தன.

உலக வங்கியின் இரண்டாவது வீதிச் செயற்றிட்டத்தின்கீழ் வரக்காப் பொலவிலிருந்து கண்டி வரையிலான கொழும்பு—கண்டி வீதி, பெப்பிலியானயி லிருந்து கொரணை வரையிலான கொழும்பு—கொரண வீதி, கடவத்தை— வெலிசரை வீதி என்பனவற்றின் புத்தாக்க வேலைகள் 1990 இறுதியில் முற்றுப் பெற்றன. இவ்வாண்டில், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட முதன்மை வீதி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் மாத்தளை—தம்புளை— கபரணை வீதியின் புத்தாக்க வேலைகள் முற்றுப்பெற்ற வேளையில் ஓமரகலை— தம்புளை—அநுராதபுர வீதியின் வேலைகள் முன்னேறிக் கொண்டிருந்தன. இதே வேளையில் இவ்வாண்டில் யப்பானியக் கொடை ஒன்றினால் மேற்கொள்ளப் பட்ட விக்டோரியாப் பாலத்தின் மீள் நிருமாண வேலைகள் முன்னேறிக்கொண் டிருந்தன.

1990 இல் பெருந்தெருக்கள் அமைச்சு மாகாண சபைகள் என்பனவற்றி னால் பேணப்பட்ட வீதி வலை அமைப்பு 25,749 கிலோமீற்றர்களாகக் காணப் பட்ட வேளையில் வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை, மாகாண சபைகள் என்பனவற்றினால் 5,477 பாலங்கள் பேணப்பட்டன. இவ்வாண்டில் வீதிகளை அமைப்பதற்காக ரூ. 10,750 இலட்சம் கொண்ட தொகையொன்று செலவிடப் பட்டது. இது முன்னைய ஆண்டைவிட 32 சதவீத அதிகரிப்பாகும். வீதிகளின் பேணலுக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1,780 இலட்சமாகும்.

முன்னைய ஆண்டைப்போலவே 1990 இலும் இரயில் பாதைகளின் கிலோ மீற்றரளவு 1,944 ஆக மாறாது காணப்பட்டது. சீமெந்துக் கிடைக் கட்டைத் தயாரிப்புப் பொறியின் உற்பத்தி நடவடிக்கைகள் 1990 பெப்புருவரியில் தொடங்கியதோடு உற்பத்தி செய்யப்பட்ட கிடைக்கட்டைகள் பிரதான பாதையிலும் கரையோரப் பாதையிலும் பாதை அமைப்பைப் பேணுவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

**தொடர்பூட்டல் பணிகள்**

நாட்டில் முன்னேற்றமடைந்த பாதுகாப்பு நிலைமைகளைத் தொடர்ந்து 1990 இல் அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்புத் திணைக்களங்களின் நடவடிக்கைகள் கணிசமாக முன்னேற்றமடைந்தன.

முக்கியமாக உள்நாட்டுக் கடிதங்களினதும் பொதிகளினதும் அதிகரித்த கையாளல் காரணமாக அஞ்சல் திணைக்களத்தினால் கையாளப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 1989 இன் 4,880 இலட்சத்திலிருந்து 1990 இல் 6 சதவீதத்தினால் 5,190 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1990 இல் உள்நாட்டுக் கடிதங்களின் கையாளல் 4,460 இலட்சத்திற்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் உள்நாட்டுப் பொதிகளின் கையாளல் 5 சதவீதத்தினால் 590,000 இற்கு அதிகரித்தது. இதேவேளையில் 1990 இல் வெளிநாட்டுக் கடிதங்களின் கையாளல் 5 சதவீதத்தினால் 72,382 இற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் வெளிநாட்டுப் பொதிகளின் கையாளல் முன்னைய ஆண்டின் 71,000 மட்டத்திலேயே காணப்பட்டது.

அஞ்சல் அலுவலக வலையமைப்பு 1989 இன் 3,908 இலிருந்து 1990 இல் 3,945 இற்கு விரிவடைந்தது. இதன் விளைவாக, அஞ்சல் அலுவலகமொன்றினால் பணிகள் வழங்கப்பட்ட பிரதேசத்தின் அளவு 1989 இன் 16.8 சதுர கிலோமீற்றர்களிலிருந்து 1990 இல் 16.6 சதுர கிலோமீற்றர்களுக்கு மேலும் குறைவடைந்தது. பொது மக்களுக்கு, அஞ்சல் பணிகளின் அதிகரித்த கிடைக்கத்தக்க தன்மையினையும், எய்தக் கூடிய தன்மையிணையும் இது எடுத்துக் காட்டுவதாக இருந்தது. இதேவேளையில் குடியிருப்போர் ஒருவருக்கான கடிதங்களின் எண்ணிக்கையும் 1989 இன் 28 இலிருந்து 1990 இல் 29 இற்கு அதிகரித்தது.

1990 இல் ஏற்கெனவேயுள்ள தொலைத் தொடர்பு வலையமைப்பின் விரிவாக்கத்தின் மூலமும் தரமுயர்த்துதல் மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளின் மூலமும் தொலைத் தொடர்புத் துறையின் நடவடிக்கைகள் மேலும் முன்னேற்றமடைந்தன. கொழும்புப் பிரதேச அபிவிருத்தித் திட்டம் கட்டம் IV, தொலைத் தொடர்புப் பணிகளின் பொதுவான அபிவிருத்தி, கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்தில் தொலைத் தொடர்பு வலையமைப்பு அபிவிருத்தி, தென்கிழக்காசிய மத்திய கிழக்கு, மேற்கு ஐரோப்பிய கடற்கீழ் கம்பி செயற்றிட்டம், கிராமிய பரிவர்த்தனை நிலையங்களுக்கு வானொலி அலைத் தொடர்பினூடான இணைப்புச் சுற்றுவழி என்பன இவ்வாண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பாரிய செயற்றிட்டங்களாகும். 1990 இறுதியில் கொழும்பு பிரதேச அபிவிருத்தித் திட்டம் கட்டம் IV தென்கிழக்காசியா, மத்திய கிழக்கு, மேற்கு ஐரோப்பா செயற்றிட்டத்தின் கட்டம் I என்பன முற்றுப் பெற்றிருந்த வேளையில் கொழும்பு பெரும்பாகப் பிரதேச தொலைத் தொடர்புச் செயற்றிட்டம், மற்றும் தொலைத் தொடர்பு பயிற்சி நிலையம் என்பன தொடர்பான வேலைகளின் பெரும் பகுதி

அட்டவணை 1.28

அஞ்சல் தொலைத் தொடர்புப் பணிகளின் வளர்ச்சி 1987—1990

| | 1987 | 1988 | 1989 | 1990* |
|---|---|---|---|---|
| **1. அஞ்சல் பணிகள்** | | | | |
| 1.1 அஞ்சல் வழங்கும் பரப்புகளின் எண்ணிக்கை | 6,621 | 6,621 | 6,630 | 6,636 |
| 1.2 அஞ்சல் நிலைய பணிக்குட்பட்ட பரப்பு (ச.கி.மீ.) | 17.4 | 17.0 | 16.8 | 16.6 |
| 1.3 அஞ்சல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 3,778 | 3,869 | 3,908 | 3,945 |
| 1.3.1 அரசு | 3,757 | 3,829 | 3,841 | 3,864 |
| 1.3.2 தனியார் | 21 | 40 | 67 | 81 |
| 1.4 ஒரு அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை | 4,335 | 4,306 | 4,406 | 4,398 |
| 1.5 குடியிருப்பாளரொருவருக்கு இடைக்கும் கடிதங்களின் எண்ணிக்கை | 35 | 32 | 28 | 29 |
| **2. தொலைத் தொடர்புப் பணி** | | | | |
| 2.1 உள்நாட்டுத் தொலைபேசிப் பணி | | | | |
| 2.1.1 தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை | 97,832 | 104,208 | 105,007 | 115,248 |
| 2.1.2 வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள் | 5,073 | 5,000 | 6,087 | 10,241 |
| 2.1.3 இணைப்புக்களை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை | 27,016 | 50,994 | 48,400 | 38,000 |
| 2.1.4 தொலைபேசிக்கான கேள்வி (எண்ணிக்கை) | 124,848 | 155,202 | 153,407 | 153,248 |
| 2.1.5 தொலைபேசிகளின் பரம்பல் (ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைபேசி) | 0.59 | 0.62 | 0.62 | 0.68 |
| 2.2 கடல் கடந்த தொலைத் தொடர்புப் பணி | | | | |
| 2.2.1 ரெலெக்ஸ் இணைப்புக்களின் எண்ணிக்கை | 1,378 | 1,535 | 1,591 | 1,662 |
| 2.2.2 எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை | 135 | 127 | 59 | 54 |
| 2.2.3 வெளிச் செல்லும் பணிகள் (எண்ணிக்கை) | | | | |
| 2.2.3.1 வெளிநாட்டு தொலைபேசி போக்குவரத்து (அ) | 6,376,372 | 6,980,022 | 8,038,000 | 9,006,000 |
| 2.2.3.2 வெளிநாட்டுத் தந்திகள் (ஆ) | 3,726,913 | 3,359,723 | 3,023,000 | 2,720,000 |
| 2.2.3.3 வெளிநாட்டு ரெலெக்ஸ் போக்குவரத்து (அ) | 4,854,422 | 4,824,658 | 4,777,000 | 4,730,000 |

(அ) எண் தொகைகள் நிமிடங்களின் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.
(ஆ) எண் தொகைகள் சொற்களின் எண்ணிக்கைகளிற் தரப்பட்டுள்ளன.
* தற்காலிகமானவை.

மூலங்கள்: அஞ்சல் திணைக்களம்
தொலைத்தொடர்புத் திணைக்களம்

முற்றுப் பெற்றிருந்தன. இதேவேளையில் 1990 இல் பின்லாந்தின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட மாத்தறை மாவட்ட தொலைத் தொடர்பு வலையமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்தின் சில கட்டட வேலைகளும் முற்றுப்பெற்றிருந்தன.

குறித்துரைக்கப்பட்ட இச் செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக, இவ்வாண்டில் நாட்டின் பொதுத் தொலைத் தொடர்ப் பணிகளை அபிவிருத்தி செய்வதற்காகப் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, 1990 இல் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை 10 சதவீதத்தினால் 115,248 இற்கு அதிகரித்தது. இதனைத் தொடர்ந்து எதிர்பார்ப்போர் பட்டியலில் உள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையினை 1989 இன் 48,400 இலிருந்து 1990 இல் 38,000 இற்குக் குறைப்பதற்குத் தொலைத் தொடர்புகள் திணைக்களத்துக்கு இயலுமாக இருந்தது. இதேவேளையில் 1990 இல் ரெலெக்ஸ் இணைப்புக்களின் எண்ணிக்கை 4 சதவீதத்தினால் 1,662 இற்கு அதிகரித்தது. மொத்த வெளிநாட்டுத் தொலைபேசிப் போக்குவரத்து 12 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் 1990 இல் வெளிநாட்டுத் தந்திகளும், வெளிநாட்டு ரெலெக்ஸ் போக்குவரத்தும் முறையே 10 சதவீதத்தினாலும், 1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

**சனசக்தி நிகழ்ச்சித் திட்டம்**

அரசின் வறுமை ஒழிப்புச் செயற்றிட்டத்தின் ஒரு பாகமாக 1989 இன் இறுதிக் காலாண்டில் சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் பதினொரு சுற்றுக்களில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளதோடு முதலாவது சுற்று 1989 ஒற்றோபரிலிருந்து 1991 செத்தெம்பர் வரையிலானதாகும். சனசக்தி நன்மைகளைப் பெறுவதற்கான தகைமையினைக் கருத்திற்கொள்ளாது, ஆரம்பத் தேவையொன்றாக, இலங்கை முழுவதிலும் உணவு முத்திரை பெறும் 23 இலட்சம் குடும்பங்களுக்கிடையிலும் 1989 யூன் 29 ஆம் நாள் சனசக்தி உரித்துச் சான்றிதழ்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இச்சான்றிதழானது சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கான சான்றாகும். சனசக்தி நன்மைகளைப் பெறக்கூடிய குடும்பங்களை அடையாளங்காணல், பணித்துறை அலுவலர்களின் தலையீடுகள் இன்றி வெளி நடவடிக்கைகளிலான குடும்ப அடையாளங்காணும் செயல்முறையொன்றினூடாக சம்பந்தப்பட்ட சன சமூகங்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. குடியிருப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரேயொரு கட்டளை விதி மாதாந்த குடும்ப வருவாய் ஆகும். மாதாந்தம் ரூ. 700 இற்குக் குறைவான வருவாயைக் கொண்ட குடும்பங்கள் இந்த நன்மைகளைப் பெறுவதற்காகத் தெரிந்தெடுக்கப்படுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களது நுகர்வு மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்காக 24 மாத காலப்பகுதியினுள் மாதமொன்றுக்கு ரூ. 2,500 பெறுமதியான மூலவளத் தொகுதியொன்று வழங்கப்படும். அடிப்படையில், நுகர்வுக்காக ரூ. 1,458 வழங்கப்படுவதோடு இதில் ரூ. 1,000 நேரடி நுகர்வுக்காக வழங்கப்பட்டு எஞ்சிய தொகை குடியிருப்பாளர்களின் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்படும். நுகர்வு நோக்கங்களுக்காக நிதியங்கள் தேவைப்படும்போதெல்லாம் இந்த வைப்புக்களைப் பணமாக மாற்றும் சுதந்திரத்தினைப் பயன்பெறுநர்கள் கொண்டிருந்தனர். மாதமொன்றுக்கு எஞ்சிய ரூ. 1,042 தேசிய சேமிப்பு வங்கியில் பேணப்படும் அவர்களது சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்படுகின்றது.

1989 ஒத்தோபரில் தொடங்கப்பட்ட சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது சுற்றின் நடைமுறைப்படுத்தல் அனைத்து 25 மாவட்டங்களிலும் 28 உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டது. உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் தெரிவானது சனத்தொகையின் ஒரு விகிதமாக உணவு முத்திரை பெறும் குடும்பங்களின் அதியுயர் சதவீதத்தின் அடிப்படையில் காணப்பட்டது. முதலாவது சுற்றின் நடைமுறைப்படுத்தலின் தொடக்கத்தில் 188,169 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டன. எனினும் தொடர்ச்சியான கணிப்புச் செயல்முறையொன்றினூடாக 1990 இறுதியில் இந்த எண்ணிக்கை படிப்படியாக 156,245 இற்குக் குறைக்கப்பட்டது. மாதமொன்றுக்கு ரூ. 700 இற்குக் கூடுதலான வருவாயைக் கொண்ட அல்லது தமது உழைப்பினை வழங்காத குடியிருப்பாளர்கள் இவ்வாண்டில் கிரமமான கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டனர்.

சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நுகர்வுக் கூறு பெரும்பாலும் முன்னைய உணவு முத்திரைத் திட்டத்தினைப் போன்றதாகும். எனினும் கூட்டுறவுச் சங்கங்களினூடாகவும் அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களூடாகவும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை அல்லது உணவல்லாப் பொருட்களை மட்டுமே பயன்பெறுநர்கள் கொள்வனவு செய்ய இயலும். அத்தகைய உணவுத் தொகுதியில் உள்ள எந்த ஒரு பொருளையும் தெரிவு செய்யும் சந்தர்ப்பம் பயன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகக்கூடிய கேள்வி அரிசிக்கும் கோதுமை மாவுக்குமானதாக இருந்ததோடு ஏனைய உணவுப் பொருட்களுக்கான கேள்வி குறைவானதாக இருந்தது. அத்துடன் நுகர்வுச் செலவில் கணிசமான பங்கொன்று வளமாக்கிகளினதும் வேளாண்மைக் கருவிகளினதும் கொள்வனவிற்காகச் செலவிடப்பட்டது. 1990 இறுதியில் சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முதற் சுற்றுக்கான மொத்தச் செலவு ரூ. 27,570 இலட்சமாகக் காணப்பட்ட வேளையில் தேசிய சேமிப்பு வங்கியில் நுகர்வுக் கூறிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் ரூ. 5,250 இலட்சமாக இருந்தன.

சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் மாதந்தோறும் 24 நாட்களின் உழைப்பினை வழங்கல் வேண்டும். இந்த உழைப்பு பெரும்பாலும் மணற் பாதைகளின் விரிவாக்கம், பாதைகளின் புத்தாக்கம், நீர்ப்பாசனக் கால்வாய்களின் புத்தாக்கம் போன்ற உள்ளமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. மேலதிகமாக ஏற்கெனவேயுள்ள செயற்றிட்டங்களை மேம்படுத்தவும் புதிய செயற்றிட்டங்களை அல்லது தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் பயன்பெறுநர்கள் பயிற்றப்பட்டனர். 1990 இறுதியில் அரச நிறுவனங்களின் பலதரப்பட்ட பயிற்சி நிலையங்களில் 22,500 பயன்பெறுநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அத்துடன் முதற் சுற்று

நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில் பல்வேறுபட்ட துறைகளில் 28,598 புதிய செயற்றிட்டங்கள் நிறுவப்பட்டன. வேளாண்மை 17,664, கைத்தொழில் 5,704, வர்த்தகம் 4,068, பணிகள் 1,162. இதன் விளைவாக 1990 இறுதியில் 28,990 பயன்பெறுநர் குடும்பங்கள் இச்செயற்றிட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டதோடு 38,132 புதிய தொழில் வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டன.

சனசக்தி நிகழ்ச்சித்திட்டன் பயன்பெறுநர்களுக்கு அவர்களின் வருவாய் உருவாக்க நடவடிக்கைகளுக்காகப் பலதரப்பட்ட நிதி நிறுவனங்களினால் பிணைகளின்றியே கடன் வசதிகள் வழங்கப்பட்டன. 1990 இறுதியில் நிதி நிறுவனங்கள் 18,359 குடும்பங்களுக்கு ரூ. 1,320 இலட்சத்தினை வழங்கியிருந்தன. (இலங்கை வங்கி 6,106 குடும்பங்களுக்கு ரூ. 480 இலட்சம், மக்கள் வங்கி 5,733 குடும்பங்களுக்கு ரூ. 440 இலட்சம், கூட்டுறவு கிராமிய வங்கிகள் 5,257 குடும்பங்களுக்கு ரூ. 330 இலட்சம், ஏனைய வங்கிகள் 1,263 குடும்பங்களுக்கு ரூ. 70 இலட்சம்) அத்துடன் 1990 இறுதியளவில் சிறப்பாக சனசக்தி நன்மை பெறுநர்களுக்கு நிதி மற்றும் தேர்ச்சி அபிவிருத்திக்கான உதவிகளை விரிவாக்கும்பொருட்டு உலக வங்கி உதவி நிகழ்ச்சித் திட்டமான சனசக்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நிறுவப்பட்டது.

சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் சுற்று அனைத்து 25 மாவட்டங்களிலுமுள்ள 30 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் 1990 திசெம்பரில் தொடங்கப்பட்டது. அடையாளம் காணும் முதல் முயற்சியின்கீழ் 52,840 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டன. (யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் 7 உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு நீங்கலாக) அத்துடன், அடையாளம் காணும் இரண்டாவது நடவடிக்கையின்கீழ் 26,420 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது சுற்றில் அடையாளங் காணப்பட்ட குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை 77,260 இற்குக் கொண்டுவரப்பட்டது.

**விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்சித்திட்டம்** [1]

விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டுமான வேலைகளில் பெரும்பாலானவை முடிவடைந்துவிட்டமையால் 1990 இல் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய கவனம் கீழ் நீரோட்ட அபிவிருத்திகளிலும் குடியேற்ற நடவடிக்கைகளின் மீதுமே இருந்தது. 1989 இல் பின்னடைவினைக் கொண்டிருந்த கட்டுமான, குடியேற்ற நடவடிக்கைகள் உள்நாட்டுக் குழப்பங்கள் குறைவடைந்தமையுடன் 1990 இல் கணிசமான முன்னேற்றத்தினைப் பதிவு செய்தன. எனினும் முறை 'பீ' (வலதுகரை) யை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளின் இடைநிறுத்தம் அப்பிரதேசத்தில் நிலவிய குழப்ப நிலைமைகளின் காரணமாக தொடர்ந்தும் காணப்பட்டது. 1990 இல் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் மீது ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூ. 19,600 இலட்சமாக விளங்கியதுடன் இதில் ஏறத்தாழ ரூ. 11,770 இலட்சம் அல்லது 60 சதவீதம் முறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளின்மீது செலவிடப்பட்டது. முறை 'சி' (ரூ. 5,820 இலட்சம்), முறை 'பீ' (ரூ. 5,370 இலட்சம்), முறை 'எல்' (ரூ. 580 இலட்சம்).

---

1/ இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

1990 இல் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் முக்கிய நீர் மின்வலு செயற்றிட்டங்களான விக்டோரியா (611 கிகாவாட் மணித்தியாலம்), கொத்மலை (420 கிகாவாட் மணித்தியாலம்), இரந்தெனிகல (332 கிகாவாட் மணித்தியாலம்), இரந்தம்பே (98 கிகாவாட் மணித்தியாலம்) என்பனவற்றின் மூலம் 1,461 கிகாவாட் மணித்தியாலங்களைக் கொண்ட வலு உருவாக்கப்பட்டது. இது 1989 இல் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட மொத்த வலுவிலும் பார்க்க 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியதுடன் நாட்டின் வலு உருவாக்கத்தில் ஏறத்தாழ 46 சதவீதத்திற்கும் வகை கூறியது.

மகாவலி மேலாண்மைச் சபையினால் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவு களின்படி 1990 இல் மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசங்களின் கீழ் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 114,388 எக்டேயர்களுக்கு ஏறத்தாழ 51 சதவீதத்தினால் அதிகரித்தது. 1989/90 பெரும்போகத்தில் மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 66,499 எக்டேயர்களெனத் தற்காலிகமாக மதிப் பிடப்பட்டதுடன் முன்னைய பெரும்போக பருவத்துடன் ஒப்பிடுகையில் 46 சத வீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினையும் பதிவு செய்தது. பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பில் 95 சதவீதத்திற்கு முறைகள் ‘எச்’, ‘பீ’ மற்றும் ‘சீ’ என்பன வகை கூறின. விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1989/90 பெரும்போகத்தில் முறை ‘எல்’ இல் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தொடங்கின. 1990 சிறுபோகத்தில் மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 47,889 எக்டேயர்களாக விளங்கி 59 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1990 சிறுபோகத்தில் முறை ‘எச்’ இல் பயிரிடப்பட்ட பரப்பளவு 18,468 எக்டேயர்களாக விளங்கி நான்கு மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப் பினைப் பதிவு செய்தது. முறை ‘பீ’ யிலும், முறை ‘சீ’ இலும் பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்களும் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எனினும் 1990 சிறுபோகத்தில் முறை ‘ஜி’ இல் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு 3,582 எக்டேயர்களுக்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1990 இல் மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் நெற் செய்கை யின் கீழான பரப்பு முன்னைய ஆண்டின் 66,092 எக்டேயர்களுடன் ஒப்பிடுகை யில் 93,123 எக்டேயர்களுக்கு 41 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. ஏனைய பயிர்களின் கீழான நிலப்பரப்பும் முன்னைய ஆண்டின் 9,520 எக்டேயர் களுடன் ஒப்பிடுகையில் 1990 இல் 21,265 எக்டேயர்களாக விளங்கி இரண்டு மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பினைக் காட்டியது.

மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தின் நெல் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990இல் 389,182 மெற்றிக் தொன்களுக்கு ஏறத்தாழ 43 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. தனியாக முறை ‘எச்’ இன் உற்பத்தி மட்டும் 166,362 மெற்றிக் தொன்களாக விளங்கி மகாவலியின் ஆளுமைக் குட்பட்ட பிரதேசத்தின் மொத்த உற்பத்தியில் 43 சதவீதத்திற்கு வகைகூறியது.

## அட்டவணை 1.29

## மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் புதிதாகப் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு

ஏக்டேயர்கள்

| விடயம் | பெரும் போகம் 1986/87 | சிறு போகம் 1987 | மொத்தம் 1987 | பெரும் போகம் 1987/88 | சிறு போகம் 1988 | மொத்தம் 1988 | பெரும் போகம் 1988/89 | சிறு போகம் 1989 | மொத்தம் 1989 | பெரும் போகம் 1989/90 (அ) | சிறு போகம் 1990 (அ) | மொத்தம் 1990 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முறை 'எச்' ... | 24,913 | 9,661 | 34,574 | 24,847 | 12,830 | 37,677 | 19,076 | 4,137 | 23,213 | 30,866 | 18,468 | 49,334 |
| நெல் ... | 23,317 | 3,295 | 26,612 | 23,560 | 3,951 | 27,511 | 17,300 | 1,455 | 18,815 | 27,893 | 7,594 | 35,487 |
| ஏனைய பயிர்கள் ... | 1,596 | 6,366 | 7,962 | 1,287 | 8,879 | 10,166 | 1,716 | 2,682 | 4,398 | 2,973 | 10,874 | 13,847 |
| முறை 'பி' ... | 5,902 | 5,952 | 11,854 | 6,241 | 6,413 | 12,654 | 9,014 | 9,306 | 18,320 | 12,933 | 10,565 | 23,498 |
| நெல் ... | 5,120 | 5,626 | 10,746 | 5,850 | 5,945 | 11,795 | 8,688 | 8,669 | 17,357 | 12,207 | 9,721 | 21,928 |
| ஏனைய பயிர்கள் ... | 782 | 326 | 1,108 | 391 | 468 | 859 | 326 | 637 | 963 | 726 | 844 | 1,570 |
| முறை 'சி' ... | 9,865 | 9,588 | 19,453 | 13,362 | 11,219 | 24,581 | 13,105 | 12,768 | 25,873 | 17,352 | 14,730 | 32,082 |
| நெல் ... | 9,258 | 9,480 | 18,738 | 11,618 | 11,155 | 22,773 | 11,565 | 12,409 | 23,974 | 14,085 | 14,274 | 28,359 |
| ஏனைய பயிர்கள் ... | 607 | 108 | 715 | 1,744 | 64 | 1,808 | 1,540 | 359 | 1,899 | 3,267 | 456 | 3,723 |
| முறை 'ஜி' ... | 4,033 | 4,120 | 8,153 | 4,243 | 3,613 | 7,856 | 4,381 | 3,825 | 8,206 | 4,836 | 3,582 | 8,418 |
| நெல் ... | 3,805 | 2,285 | 6,090 | 3,830 | 1,740 | 5,570 | 4,104 | 1,842 | 5,946 | 4,546 | 2,350 | 6,896 |
| ஏனைய பயிர்கள் ... | 228 | 1,835 | 2,063 | 413 | 1,873 | 2,286 | 277 | 1,983 | 2,260 | 290 | 1,232 | 1,522 |
| முறை 'எல்' ... | — | — | — | — | — | — | — | — | — | 512 | 544 | 1,056 |
| நெல் ... | — | — | — | — | — | — | — | — | — | 315 | 138 | 453 |
| ஏனைய பயிர்கள் ... | — | — | — | — | — | — | — | — | — | 197 | 406 | 603 |
| மொத்தம் ... | 44,713 | 29,321 | 74,034 | 48,693 | 34,075 | 82,768 | 45,576 | 30,036 | 75,612 | 66,499 | 47,889 | 114,388 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை.

குழப்ப நிலைமைகளை எதிர்நோக்கியமையினால் 1989 இல் பின்னடைவினைக் கொண்டிருந்த மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான குடியேற்ற நடவடிக்கைகள் 1990 இல் உள்நாட்டுக் குழப்பநிலைமைகள் குறைவடைந்ததைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்களவில் மீட்சி பெற்றன. 1990 இல் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் முறைகளில் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் (வேளாண்மையாளரும் வேளாண்மையாளரல்லாதோரும்) மொத்த எண்ணிக்கை 8,588 ஆக விளங்கி விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து எந்த ஒரு தனிக் குறிப்பிட்ட ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட குடும்பங்களின் குடியேற்றங்களையும்விட மிக உயர்வானதாக இருந்தது. 1990 இல் முறைகள் 'பீ' இலும், 'சி' இலும் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை முறையே 3,492

அட்டவணை 1.30

### மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியேற்றம்
### ('எச்,' 'சி,' 'பி,' 'ஜி,' 'எல்' முறைகள்)

(குடும்பங்களின் எண்ணிக்கை)

| ஆண்டு | முறை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | 'எச்' | 'சி' | 'பி' | 'ஜி' | 'எல்' | |
| 1975 ... ... | — | — | — | — | — | — |
| 1976 ... ... | 2,383 | — | — | — | — | 2,393 |
| 1977 ... ... | 3,141 | — | — | — | — | 3,131 |
| 1978 ... ... | 2,754 | — | — | — | — | 2,754 |
| 1979 ... ... | 5,290 | — | — | — | — | 5,290 |
| 1980 ... ... | 7,407 | — | — | — | — | 7,407 |
| 1981 ... ... | 2,389 | 2,777 | — | — | — | 5,166 |
| 1982 ... ... | 1,449 | 2,683 | 1,918 | — | — | 6,050 |
| 1983 ... ... | 1,077 | 1,988 | 1,938 | 1,319 | — | 6,322 |
| 1984 ... ... | 1,956 | 1,992 | 1,381 | 446 | — | 5,775 |
| 1985 ... ... | 44 | 823 | 3,423 | 1,045 | — | 5,335 |
| 1986 ... .. | 780 | 2,151 | 1,260 | 583 | — | 4,774 |
| 1987 ... ... | 182 | 1,407 | 852 | 274 | — | 2,720 |
| 1988 ... .. | 14 | 1,081 | 656 | 85 | 3,270 | 5,106 |
| 1989 ... .. | 9 | 1,008 | 324 | 1,305 | 94 | 2,740 |
| 1990 (அ)... .. | 1,680 | 3,427 | 3,492 | 366 | — | 8,588 |
| மொத்தம் . | 30.555 | 19.337 | 14,872(ஆ) | 5,423 | 3.364 | 73.551 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை.

(ஆ) 377 காணித்துண்டுகள் இரத்துச் செய்யப்பட்டதனால் ஆண்டு எண் தொகைகள் மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டா.

குறிப்பு: 1990 இற்கு முன்னைய தரவுகள் திருத்தப்பட்டுள்ளன.

ஆகவும், 3,427 ஆகவும் விளங்கின. கடந்த சில ஆண்டுகளாக கீழ் நோக்கிய போக்கினைக் கொண்டிருந்த முறை 'எச்' இல் குடும்பங்களின் குடியேற்றம் 1990 இல் கணிசமான முன்னேற்றத்தினைப் பதிவு செய்து 1,680 இற்கு உயர்வடைந்தது. இதில் 1,595 குடும்பங்கள் அத்துமீறிக் குடியேறி பின்னர் இப்பிரதேசத்தின் சட்டரீதியான குடியேற்றக்காரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும்.

**ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்திகள்**

1990 இல் ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகள், தற்போதுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும், விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வருவன தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள வேளாண்மையாளர் அமைப்புக்களின் சுறுசுறுப்பான பங்களிப்புடன் தாக்கம் மிக்க நீர்ப்பாசன முகாமைத் திட்டத்தை மேம்படுத்துவதற்குமே பெருமளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இவ்வாண்டில் கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியேற்ற செயற்றிட்டம் கட்டம் I மற்றும் II, நில்வளகங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம், கிராம நீர்ப்பாசன புத்தாக்கச் செயற்றிட்டம், மினிப்பே--நாகதீப நீர்ப்பாசன புத்தாக்க செயற்றிட்டம் என்பன செயற்பாட்டிலிருந்த முக்கிய நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களாகும். ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் அவை தொழிற்பட்ட குறிப்பிட்ட மாவட்டங்களின் நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களில் ஈடுபட்டிருந்தன. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உள்நாட்டுக் குழப்பங்கள் குறைவடைந்தமையுடன் நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் 1990 இல் கணிசமான முன்னேற்றத்தினை அடைந்தன. எனினும் கட்டுபான மூலப் பொருட்களின் தொடர்ச்சியான பற்றாக்குறையின் காரணமாக செயற்றிட்டங்களின் செயற்பாடு இலக்கிடப்பட்ட மட்டங்களுக்குக் கீழேயே இருந்தது.

கிருண்டி ஓயா நீர்ப்பாசனக் குடியேற்றச் செயற்றிட்டம் கட்டம் I இன் அனைத்து முதன்மை வேலைகளும் கால்வாய் முறைகளும் ஏற்கனவே முடிவடைந்திருப்பதுடன் 1990 இல் வேளாண்மைக் குடும்பங்களைக் குடியேற்றுவதும் நீர் வழங்கல் திட்டம் தொடர்பான வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நீர்ப்பாசனத் திணைக்களத்தின்படி கிருண்டி ஓயா நீர்ப்பாசனக் குடியேற்ற செயற்றிட்டம் கட்டம் I மற்றும் II ஆகிய இரண்டின் கீழும் இவ்வாண்டில் ஏறத்தாழ 236 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. கிருண்டி ஓயா நீர்ப்பாசனக் குடியேற்ற செயற்றிட்டம் கட்டம் II இன் கீழ் 1990 இல் ஏறத்தாழ 266 எக்டேயர்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில், கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியேற்ற செயற்றிட்டம் கட்டம் I மற்றும் II இன் மீதான செலவினம் முறையே ரூ. 110 இலட்சமாகவும், ரூ. 900 இலட்சமாகவும் இருந்தன.

நில்வள கங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் நிலை II இன் மீதான வேலைகள் 1990 இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவு செய்துள்ளன. 1990 இல் இத் திட்டத்தின் மீதான செலவினம் ரூ. 160 இலட்சமாக இருந்தது.

வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசன செயற்றிட்டம் 1990 மாச்சில் தொடங்கப்பட்டது. இத்திட்டம், தற்போதுள்ள புதிய நிலங்களைக் கொண்ட 9,873 எக்டேயர்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்காக புத்தளம், குருநாகல் மாவட்டங்களிலுள்ள 12 திட்டங்களைப் புத்தாக்கம் செய்வதினை எதிர்பார்த்துள்ளது. இச் செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 4,520 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ரூ. 140 இலட்சம் 1990 இல் செலவிடப்பட்டது. மினிப்பே–நாகதீப நீர்ப்பாசன புத்தாக்க செயற்றிட்டத்தின்கீழ் இவ்வாண்டில் ரூ. 190 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் உதவியளிக்கப்பட்ட கிராமிய நீர்ப்பாசன புத்தாக்கச் செயற்றிட்டம் 1990 இல் 129 சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றியதுடன் ஏறத்தாழ 3,021 எக்டேயர்களுக்குத் திருந்திய நீர்ப்பாசன வசதிகளையும் வழங்கியது. இச் செயற்றிட்டங்களின் கீழ் 81 சிறு நீர்ப்பாசனத் திட்டங்களின் மீதான புத்தாக்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. 1990 இல் கிராமிய நீர்ப்பாசன புத்தாக்கச் செயற்றிட்டம் தொடர்பாக ஏற்பட்ட செலவு ரூ. 1,180 இலட்சங்களாக விளங்கியது.

அட்டவணை 1.31

தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான செலவு

| செயற்றிட்டம் | உதவியின் மூலங்கள் | மொத்த வெளிநாட்டு உதவியின் கடப்பாடு (பத்து இலட்சங்களில்) | 1989இன் உண்மையான செலவு (ரூ.ப.இ.) | 1990* இன செலவு (ரூ.ப. இ.) | 1990* இறுதி வரை ஒன்று சேர்ந்த செலவு (ரூ.ப.இ.) |
|---|---|---|---|---|---|
| 1. கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியமர்த்தல் செயற்றிட்டம் (கி.ஓ.நீ.கு.செ.) கட்டம் I | ஆ.அ.வ.<br>கே.எப்.டபிள்யூ.<br>வே.அ.ப.நி.<br>வே.அ.ப.நி. | 30.0 (ஐ.அ. டொலர்)<br>43.5 (டி. மா.)<br>5.5 (சி.எ.உ.)<br>12.0 (ஐ.அ. டொலர்) | 52.2 | 11.0 | 1,693.1 |
| 2. கிருண்டி ஓயா நீர்ப்பாசன குடியமர்த்தல் செயற்றிட்டம் (கி.ஓ.நீ.கு.செ.) கட்டம் II | ஆ.அ.வ | 22.2 (சி.எ.உ.) | 85.1 | 89.5 | 286.3 |
| 3. கிராமிய நீர்ப்பாசன புனர்வாழ்வு செயற்றிட்டம் ... | ப.அ.அ. | 24.4 (சி.எ.உ.) | 73.7 | 117.7 | 928.0 |
| 4. நில்வளகங்கை வெள்ளப் பாதுகாப்புத்திட்டம் சட்டம் II | பிரான்சு | 200.0 (பி.பிராங்) | 80.6 | 16.2 | 1,050.9 |
| 5. மினிப்பே–நாகதீப நீர்ப்பாசன புனர்வாழ்வு செயற்றிட்டம் | யப்பான் | 1,295.0 (யென்) | 1.3 | 19.0 | 20.3 |
| 6. வடமேல் மாகாண சிறப்பு நீர்பாசன செயற்றிட்டம் | — | — | — | 14.1 | 14.1 |

மூலம்: நீர்ப்பாசனத் திணைக்களம்

* தற்காலிகம்.

குறிப்பாக அநுராதபுரம், பொலநறுவை, குருநாகல், மொனராகலை, மாவட்டங்களுக்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டங்களினூடாக அவை தொடர்பான மாகாண சபைகளினால் ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பயன் படுத்தி நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. நீர்ப்பாசன முறைகளின் ஒன்றிணைக்கப்பட்ட முகாமையின்கீழ், 1990 இல் பங்கீட்டு வழிப் படுத்தல் வேளாண்மையாளர் அமைப்புக்களை நிறுவுவது தொடர்பான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. 1990 இறுதிவரை நிறுவப்பட்ட வயல் முறைத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 5,836 ஆகும்.

**ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

மத்திய மட்டத்திலான வலுவான இணைப்புடன் அபிவிருத்திகளைப் பன் முகப்படுத்துவதன் வாயிலாக கிராமியப் பிரதேசங்களின் வாழ்க்கைத் தரத் தினையும், வறுமை ஒழிப்பினையும் மேம்படுத்துவதன் மீது ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் கவனம் செலுத்தியது.

உள்நாட்டுக் குழப்பங்களின் விளைவாக கடந்த காலத்தில் இடைநிறுத்தப் பட்ட மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் செயற்றிட்டங்கள் இலங்கை அரசின் இசைவுடன் கொடையாளர்களினால் முடித்துக்கொள்ளப் பட்டமையினால் 1990 இல் ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 12 மாவட்டங்களை மட்டுமே உள்ளடக்கியிருந்தது. 1990 இல் காலி மாவட்டத்திற்கான ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட எடுத்துரைப்புக்களின் வடிவமைப்பிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து தொழில் நுட்ப உதவிகள் பெறப்பட்டன. சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு அநுராதபுர மாவட்டத்திற்கான ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபி விருத்திச் செயற்றிட்டத்திற்கு உதவுவதற்கு இணங்கியுள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மொத்தச் செலவினம் 1989 இன் ரூ. 3,320 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 6,940 இலட்சமாக விளங்கியது. 1990 இறுதிவரை அனைத்துச் செயற்றிட்டங்களின் மீதுமான திரண்ட செலவு 1989 இல் ஏற்பட்ட செலவு களுடன் சேர்த்து அட்டவணை 1.32 இல் தரப்பட்டுள்ளது. 1989 இல் கடுமை யான பின்னடைவினைக் கொண்டிருந்த ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபி விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான அபிவிருத்தி நடவடிக்கைகள் செயற்றிட் டப் பிரதேசங்களின் உள்நாட்டுக் குழப்பங்கள் குறைவடைந்ததைத் தொடர்ந்து 1990 இல் மீட்சியைப் பதிவு செய்தன.

அட்டவணை 1.32

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவு 1989—1990

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மாவட்டம் (அ) | | வெளிநாட்டு உதவி மூலங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு | | | இது காலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவு | | செலவு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வெளிநாட்டு உதவிக் கடப்பாடுகள் | உள்நாடு | மொத்தம் | 1989 முடிவில் உள்ளபடி | 1990 முடிவில் உள்ளபடி (ஆ) | 1989 ஆம் ஆண்டின் செலவு | 1990 ஆம் ஆண்டின் செலவு (ஆ) |
| 1. மாத்தறை | (1979)... | சீடா (சுவீடன்) | 388 | 37 | 375 | 197 | 240 | 22 | 43 |
| 2. அம்பாந்தோட்டை | (1979)... | நொராட (நோர்வே) | 686 | 14 | 700 | 494 | 571 | 47 | 76 |
| 3. நுவரெலியா | (1979)... | நெதர்லாந்தி | 510 | 10 | 520 | 312 | 349 | 25 | 37 |
| 4. மாத்தளை | (1981)... | உலக வங்கி | 337 | 131 | 468 | 415 | 434 | 30 | 19 |
| 5. புத்தளம் | (1981)... | உலக வங்கி | 406 | 191 | 597 | 579 | 605 | 34 | 26 |
| 6. பதுளை | (1981)... | வே. அ. ப. நி. | 500 | 110 | 610 | 308 | 357 | 31 | 50 |
| 7. இரத்தினபுரி | (1984)... | நெதர்லாந்த | 209 | 4 | 213 | 142 | 169 | 17 | 28 |
| 8. பொலன்னறுவை | (1984)... | நொராட் | 413 | 8 | 421 | 180 | 236 | 35 | 56 |
| 9. கேகாலை | (1986)... | வே. அ. ப. நி. | 262 | 147 | 409 | 102 | 144 | 29 | 43 |
| 10. களுத்துறை | (1987)... | பின்லாந்து | 371 | 66 | 437 | 120 | 172 | 56 | 52 |
| 11. கண்டி | (1987).. | சே. கூ. குடியரசு | 60 | 2 | 62 | 17 | 22 | 6 | 5 |
| 12. கம்பகா | (1989)... | யப்பான் | 521 | 38 | 559 | 0.5 | 260 | 0.5 | 259 |

(அ) நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : கொள்கைத் திட்ட திட்டமிடல், திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சு.